### அம்பேத்கர் அயலக கல்வி உதவித் தொகை மலேசியாவில் பயிலும் மாணவர் பாரதிதாசனுக்கு வழங்கவில்லை:

# சமூக நீதி நாளில் இப்படி ஒரு சமூக அநீதியை அரங்கேற்றி இருக்கும் சோபா மாடல் அரசு!



## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, செப்.18-

அம்பேத்கர் அயலக கல்வி உதவித் திட்டத்தின் கீழ் மலேசியாவில் பயிலும் மாணவர் பாரதிதாசனுக்கு உதவித் தொகை வழங்காமல், சமூக நீதி நாளில் இப்படி ஒரு சமூக அநீதியை அரங்கேற்றி இருக்கும் Sofa Modal அரசுக்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

**அம்பேத்கர் அயலக கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் மலேசியாவில் ஆராய்ச்சி படிப்பு படித்து வரும் தமிழ்நாட்டு மாணவர் பாரதிதாசன், இந்த அரசு தனக்கான கல்வி உதவித்தொகையை வழங்காமல் இழுத்தடித்ததை சுட்டிக்காட்டி இருந்த நிலையில், தற்போது இந்த ஆட்சியாளர்கள் அவருடைய கல்வியையே கேள்விக்குறியாக்குவதாக கண்ணீர் மல்க வீடியோ வெளியிட்டுள்ளார்.**

**#சமூகநீதி நாளில் இப்படி ஒரு சமூக அநீதியை அரங்கேற்றி இருக்கும் #Sofa Model அரசை வன்மையாக கண்டிக்கிறேன்.**

**தன்னுடைய தவறை மறைக்க அடுத்தவர் மீது பழிபோடும் இந்த ஆட்சியாளர்கள், அம்பேத்கர் அயலக கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் கல்வி உதவித்தொகை வரவில்லை என்று சொன்ன மாணவரை குறிவைத்து நெருக்கடி தருவதும், கல்வியில் இருந்து வெளியேற்ற துடிப்பதும் கேவலத்தின் உச்சம்.**

**மாணவர் பாரதிதாசனை பழிவாங்க, அவருடைய கல்வியை பாழாக்கும் வேலையில் இந்த அரசு இறங்கி இருப்பது ஏற்க முடியாது.**

**ரோஹித் வெமுலாவுக்கு நடந்த அதே கொடுமையை இந்த அரசு தனக்கு செய்கிறது என்று மனம் நொந்து பேசியிருக்கும் பாரதிதாசனின் கல்விக்கு எந்த இடையூறும் இந்த அரசு செய்யக் கூடாது.**

**அவருக்கு சேர வேண்டிய கல்வி உதவித் தொகை கிடைக்கவும் அவரது ஆராய்ச்சி படிப்பு தொடரவும் இந்த Reels அரசு துணை நிற்க வேண்டும்.**

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வேட்பாளரும் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் ஆலோசனையின்படி, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், மதுராந்தகம் நகரச் செயலாளர் கே.குமார், அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியச் செயலாளர் வீ.தம்பு ஆகியோர் முன்னிலையில் மதுராந்தகம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டுகள் மற்றும் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சிகள் ஆகியவற்றைச் சேர்ந்த வார்டு செயலாளர்கள், ஊராட்சி கிளைச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகளைச் சந்தித்தார்.

### முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் பூவிருந்தவல்லி

# நகர இளைஞரணி அமைப்பாளர் அ.முகமது ராஷிக் ஹனீப் - மரியம் பாத்திமா திருமணம்!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைக்கிறார்!

திருவள்ளூர், செப்.18

திருவள்ளூர் மத்திய மாவட்டம், பூவிருந்தவல்லி நகர இளைஞரணி அமைப்பாளர் அ.முகமது ராஷிக் ஹனீப் - மரியம் பாத்திமா ஆகியோரது திருமண விழா, வருகிற 20-09-2026 ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணியளவில், திருவேற்காடு வேலப்பன்சாவடி கே.வி.என். திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

திருமண விழாவிற்கு திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் தலைமை வகிக்கிறார்.

இந்நிகழ்வில், கழக இளைஞரணிச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு திருமணத்தை நடத்தி வைத்து, மணமக்கள் அ.முகமது ராஷிக் ஹனீப் - மரியம் பாத்திமா ஆகியோரை வாழ்த்துகிறார்.

நிகழ்ச்சிக்கு பூவிருந்தவல்லி நகரக் கழகச் செயலாளர் ஜி.ஆர்.திருமலை, மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், அப்துல் மாலிக், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நடுக்குத்தகை கே.சுரேஷ்குமார், நகர மன்றத் தலைவர் காஞ்சனா சுதாகர், துணைத் தலைவர் க.ஸ்ரீதர் நகரக் கழக நிர்வாகிகள் எச்.தாஜுதீன், துரை பாஸ்கர், அப்பர் ஸ்டாலின், டில்லி ராணி மலர்மன்னன், எஸ்.அசோக்குமார், ஜெ.சுதாகர், இரா.புன்னியா கோட்டி, ப.அன்பழகன், பி.சௌந்தரராஜன், ஷாஜகான், விமல் ஆனந்த், யுவராஜ், சத்யா முன்னிலை வகிக்கின்றனர்.

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.செந்தாமரை, ஜி.சி.சி. கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ், டி.பிரியாகுமார், எஸ்.சதீஷ்குமார் மற்றும் நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சபரி, நிஜாமுதீன், தமிழ்ச்செல்வன், ஜெய்சுந்தர், தினேஷ் பாபு ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.

திருவேற்காடு நகரக் கழகச் செயலாளர் என்.இ.கே. மூர்த்தி இறுதியில் நன்றி கூறுகிறார். இத்திருமண விழாவில் ஆதிதிராவிடர் நலக்குழு அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி, மாநில, மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி. ஜெரால்டு, மா.ராஜி, வி. ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் எஸ்.ஜோயல், ஜி.பி.ராஜா, கே.இ. பிரகாஷ், பி.எஸ்.சீனிவாசன், இன்பா ரகு, இளைய ராஜா, சி.ஆனந்த்குமார், மேயர் ஜி.உதயகுமார் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். மேலும், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள் சன் பிரகாஷ், ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், பேபிசேகர், பொன்.விஜயன், தி.வை.இரவி, டி. தேசிங்கு, ஆர்.ஜெயசீலன், முரளி கிருஷ்ணன், சே.பிரேம் ஆனந்த், தங்கம் முரளி, தி.வே.முனுசாமி மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், கவுன்சிலர்கள், கழக இந்நாள்-முன்னாள் மூத்த முன்னோடிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.



தந்தை பெரியார் அவர்களின் 147 வது பிறந்த நாளை முன்னிட்டு 167வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், 167வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி துர்கா தேவி நடராஜன் ஏற்பாட்டில், ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12வது மண்டலகுழு தலைவருமான, என். சந்திரன் நேற்று எம். ஜி.ஆர்.ரோட்டில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து, திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தி, உறுதிமொழி ஏற்று, இனிப்பு வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் எம். எஸ். கே. இப்ராஹிம், வி.என். பி. வெங்கட்ராமன், ஆர்.ஆர். ஜெயராம் மார்த்தாண்டன், இ.உலகநாதன், கே.ஆர். ஜெகதீஸ்வரன், ஏ. வேலவன், ஏ. ஆர். சரவணா, ஆர். பாபு, ஏ. சாலமோன் எம்.சி., இ. ரமேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் தந்தை பெரியார் பிறந்த நாள் - "சமூகநீதி நாள்" உறுதிமொழி ஏற்பு!

### மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையில்!

சென்னை, செப்.18-

"தந்தை பெரியாரின் ஒவ்வொரு பிறந்த நாளும் 'சமூக நீதி நாளாக' கடைப்பிடிக்கப்படும் என்றும், அந்நாளில் அனைவரும் 'சமூகநீதி நாள் உறுதிமொழி' ஏற்க வேண்டும் என்றும் கழகத் தலைவர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பு வகித்தபோது, கடந்த 06.09.2021 அன்று தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிவித்ததற்கிணங்க, தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளான 17.09.2026 அன்று காலை 11.00 மணியளவில், சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் சட்டமன்றத் தொகுதி அலுவலகத்தில் சமூகநீதி நாள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் பி. கே.சேகர்பாபு தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, கழக நிர்வாகிகள் மற்றும் செயல்வீரர்களுடன் "சமூகநீதி நாள் உறுதிமொழி" ஏற்றார்.



**சமூகநீதி நாள் உறுதிமொழி**

• "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற அன்பு நெறியும், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பண்பு நெறியும் எனது வாழ்வியல் வழிமுறையாகக் கடைப்பிடிப்பேன்!

• சுயமரியாதை ஆளுமைத் திறனும், பகுத்தறிவுக் கூர்மைப் பார்வையும் கொண்டதாக என்னுடைய செயல்பாடுகள் அமையும்!

• சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம் ஆகிய கொள்கைகளுக்காக என்னை நான் ஒப்படைத்துக் கொள்வேன்!

• மானுடப் பற்றும் மனிதாபிமானமும் ஒன்றே எனது இரத்த ஓட்டமாக அமையும்!

• சமூகநீதியையே அடித்தளமாகக் கொண்ட சமுதாயம் அமைக்கும் எனது பயணம் தொடர இந்த நாளில் உறுதியேற்கிறேன்!

இந்நிகழ்ச்சியில் துறைமுகம் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர்கள் எஸ். ராஜசேகர், எஸ். முரளி, ஜி.எம். தேவன், எம். விஜயகுமார், பி. ஸ்ரீராமுலு, இசட். ஆசாத், என்.பி.எம். ஷேக் அப்துல்லா, ராஜேஷ் ஜெயின், இப்ராஹிம் கனி, இரா. கலைச்செல்வி, நா. ரஞ்சித் விஜயாலயன், பி. விஜயகுமார், எல். சம்பத்குமார், எம். விநாயகம், வெ. பரிமளம், மே. ஜனார்த்தனன், கே.ஆர். அபரஞ்சி, மா. முத்துக்குமார், ந. சுந்தரம், எஸ். சந்தியாகு, வி. சந்தான லட்சுமி, சி.ப. ஜெயராமன், ஆ. நா. பார்த்திபன், கே. கவியரசு, எல். சத்யநாராயணன், எஸ். புகழேந்தி, ஆர்.ஏ. அஸ்லாம், டி. கதிரவன் (எ) ராஜா, எம். பரத்குமார், மா. ஜெய்சங்கர், பா. கதிரவன், ஆர். ரவிச்சந்திரன், ஜி. ராம மூர்த்தி, பா. அண்ணாதுரை, டி. சதீஷ்குமார், வே.பா. பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள், முன்னோடிகள் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள் விழாவையொட்டி கரசங்கால் சமத்துவபுரத்தில் பெரியார் சிலைக்கு குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன் மாலை அணிவித்து 'சமூக நீதி நாள் உறுதிமொழி' ஏற்றுக்கொண்டார். நிகழ்வில் பொறுப்புகுழு உறுப்பினர்கள், ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் – செஞ்சியில்

# பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்த நாள் விழா!

## செஞ்சி மஸ்தான் மரியாதை!

செஞ்சி செப் 18-

திமுக கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அவர்கள் தந்தை பெரியாரின் பிறந்த நாளை சமூக நீதி நாளாக கடைபிடிக்க வேண்டும் என அறிவுறுத்தி இருந்தார். அந்த வகையில்

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் 148 ஆவது பிறந்தநாள் விழா நேற்று தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்தந்தை பெரியாரின் பிறந்தநாள் விழா செஞ்சியில் கொண்டாடப்பட்டது.

செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமை தாங்கினார். செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார்அலி மஸ்தான் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு செஞ்சி அன்னை அஞ்சுகம் அம்மாள் பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த

தந்தை பெரியாரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி சமூக நீதி உறுதிமொழி ஏற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மீஞ்சூர் க. சுந்தரம்
### செப்டம்பர் 18 (2024)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈர்ப்பு கொண்டு பணியாற்றத் தொடங்கினார்.

மீஞ்சூர் ஒன்றியப் பிரதிநிதி, ஒன்றிய துணைச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் உள்ளிட்ட கழகப் பொறுப்புகளை வகித்ததோடு, கழகத் துணைப் பொதுச்செயலாளராகவும் – மாநில ஆதிதிராவிடர் நலக்குழு தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

1989,1996 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, முத்தமிழறிஞர் கலைஞர் அமைச்சரவையில், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராகவும் – பால்வளத் துறை அமைச்சராகவும் இருந்தவர். கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

2023ஆம் ஆண்டுவேலூரில் நடைபெற்ற முப்பெரும் விழாவில்,"அண்ணா விருது" வழங்கி சிறப்பித்ததுடன், "கழகப் பணியிலும், மக்கள் பணியிலும் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு செயல்பட்ட இவரது மறைவு பேரிழப்பாகும்" என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**